# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு – 2024

8 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் :100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ________ நாட்டைச் சேர்ந்தவர்.
அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின் இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ்

2. வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?
அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி இ) சிவகங்கை ஈ) விருப்பாச்சி

3. கல்கத்தாவில் முதல் மதரசாவை நிறுவிய தலைமை ஆளுநர் யார்?
அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) ராபர்ட் கிளைவ் இ) வில்லியம் பெண்டிங் ஈ) ரிப்பன்

4. கூற்று: ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.
காரணம்: அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.
அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

5. பருத்தி வளர ஏற்ற மண்
அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) வண்டல் மண் ஈ) மலை மண்

6. சார்புத் துறை ________ வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 5

7. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ________
அ) கேப் பிளாங்கா ஆ) அகுல்காஸ் முனை இ) நன்னம்பிக்கை முனை ஈ) கேப் டவுன்

8. ஆழம் குறைந்த நீர்ப் பகுதிகள் ________ வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.
அ) மஞ்சள் ஆ) பழுப்பு இ) வெளிர் நீலம் ஈ) அடர் நீலம்

9. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு
அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967

10. இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ________
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர் ஈ) முதலமைச்சர்

11. உலக மனித உரிமைகள் தினம் ________
அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10 இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

12. FIR என்பது
அ) முதல் தகவல் அறிக்கை ஆ) முதல் தகவல் முடிவு
இ) முதல் நிகழ்வு அறிக்கை ஈ) மேற்கண்ட எவையும் இல்லை

13. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள்
அ) வரி ஏய்ப்பவர்கள் ஆ) பதுக்குபவர்கள் இ) கடத்தல்காரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

14. சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட பின்வருவனவற்றில் எந்த குறியீடு பயன்படுத்தப்படுவதில்லை?
அ) கருப்புப் பணம் ஆ) ஆயுட்காலம் இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஈ) வேலைவாய்ப்பு

II. பொருத்துக 6 x 1 = 6

15.

| | | |
|---|---|---|
| i) பிளாசிப் போர் | – | இந்தியா |
| ii) இரயத்துவாரி முறை | – | முதன்மைத் துறை |
| iii) காணிப் படங்கள் | – | 1757 |
| iv) ஒற்றைக் குடியுரிமை | – | வரிக்கோட்டு பாதை |
| v) பாதசாரி | – | வரி விதிப்பு |
| vi) வேளாண்மை | – | மதராஸ் |

III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

16. சிராஜ் உத் – தௌலாவின் தலைமை படைத் தளபதி ________

17. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ________

18. நீர் சுழற்சியில் ________ நிலைகள் உள்ளன.

K. SIVANANDHA, M.A. B.Ed.,
BT. ASST [SOCIAL SCIENCE].
GOVT. HIGH. SCHOOL,
SANDANAPALLI @ Erudukotta
KELAMANGALAM (BLOCK)
KRISHNAGIRI (DT).
PH:9003373506

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

19. மெட்ராஸ் ரெஜிமெண்ட் பிரிவின் மையம் அமைந்துள்ள இடம் ________
20. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ________ பணமாகும்.

IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக. 5 x 1 = 5

21. நாலடியார் சமணர் வழங்கிய நூலாகும்.
22. இந்தியாவின் 'உள்ளாட்சி அமைப்பின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ரிப்பன்.
23. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.
24. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.
25. வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவருக்கு (OCI – Overseas Citizen of India Card Holder) வாக்குரிமை உண்டு.

V. வேறுபடுத்துக. 5 x 2 = 10

26. காலநிலை – வானிலை
27. இயற்கை இடர்கள் – செயற்கை இடர்கள்
28. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் – கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்
29. மேற்கு அண்டார்டிகா – கிழக்கு அண்டார்டிகா
30. புவிக்கோள மாதிரி (Globe) – புவிப்படம் (Map)

VI. காரணம் கூறுக. 5 x 1 = 5

31. தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.
32. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.
33. உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.
34. எகிப்து 'நைல் நதியின் நன்கொடை' என அழைக்கப்படுகிறது ஏன் ?
35. அண்டார்டிகா 'ஆராய்ச்சியாளர்களின் கண்டம்' என அழைக்கப்படுகிறது.

VII. சுருக்கமாக விடையளி (எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி). 10 X 2 = 20

36. இளவரசர் ஹென்றி 'மாலுமி ஹென்றி' என ஏன் அழைக்கப்படுகிறார் ?
37. பாளையக்காரர்கள் என்பவர் யார் ? சிலரின் பெயரைக் கூறுக.
38. 'செல்வச் சுரண்டல் கோட்பாடு' பற்றி எழுதுக.
39. பெண்களின் முன்னேற்றத்திற்காக போராடிய முக்கிய தலைவர்களின் பெயரினைக் குறிப்பிடுக.
40 'இடம் பெயர்தல்' – வரையறு.
41. மலை அடிவாரப் பகுதிகளில் நாம் ஏன் குடியிருப்புகளை அமைக்க கூடாது ?
42. இயற்கை அமைப்புப் புவிப்படம் (Physical Map) என்றால் என்ன ?
43. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.
44. கல்வி உரிமைச் சட்டம் பற்றி எழுதுக.
45. சார்க் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
46. 'பண்டமாற்று முறை' என்றால் என்ன ?
47. பொதுத் துறைகளின் மூன்று உறுப்புகள் யாவை ?

VIII. விரிவான விடையளி. 4 x 5 = 20

48. நிலையான நிலவரித் திட்டத்தின் நிறை, குறைகளை விவாதிக்க. (அல்லது)
கோத்தாரி கல்விக் குழுவின் முக்கியமானப் பரிந்துரைகளைச் சுட்டிக் காட்டுக.
49. நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க. (அல்லது)
தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப் படம் மூலம் விளக்குக.
50. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி. (அல்லது)
சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன ?
51. சேமிப்புகளுக்கும் முதலீடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (அல்லது)
பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

IX. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் (India Outline Map) குறிக்கவும். 10 x 1 = 10

i) பஞ்சாப் ii) டெல்லி iii) சம்பரான் iv) பாரக்பூர் v) கல்கத்தா
vi) ஜான்சி vii) பர்தோலி viii) பம்பாய் ix) மதராஸ் x) இந்தியப் பெருங்கடல்

X. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

i) இந்தியா ii) பசிபிக் பெருங்கடல் iii) ஆப்பிரிக்கா iv) ஆஸ்திரேலியா v) அண்டார்டிகா



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com